# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 006/மா/2017

ஆணை எண். 139/2017

நாள் : 08/06/2017

திரு ஆர். விஜயகுமார்,
மாதவரம், சென்னை – 110. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 3,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 60. – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, மாதவரம், செல்லியம்மன் நகர், பொன்னியம்மன் மேடு, 67–C எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு R. விஜயகுமார் அவர்களது 17.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 18.01.2017 அன்று பெறப்பட்டு 006/மா/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் சென்னை மாநகராட்சி 3–வது மண்டல பொறியாளர்கள் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

**சென்னை மாநகராட்சி, மாதவரம், செல்லியம்மன் நகர், பொன்னியம்மன் மேடு, 67–C** எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு R. விஜயகுமார் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் **தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-**

(i) சென்னை மாநகராட்சி, மண்டலம்–3 பகுதியில் தெருச் சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் ஏற்படுத்துதல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டன என்று மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்திருப்பது ஏற்புடையது அல்ல என்றும் ;

(ii) உயிரினங்கள் (Living beings) இல்லாத இடத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளது மற்றும் அச்சாலை பொன்னியம்மன்மேடுப் பகுதியை இணைக்கும் மாற்றுச்சாலை என மண்டல அலுவலர்கள் தெரிவித்தது ;

(iii) பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டு மனைகளாக விற்பனை செய்யப்பட்டது மற்றும் அடுக்குமாடி கட்டிடம் கட்டியதுடன், இவ்வாக்கிரமிப்பினை மறைக்கவே சாலை அமைக்கப்பட்டது ;

(iv) மனுதாரர் வசிக்கும் பகுதியில் உள்ள பல நகர்ப்பகுதிகளின் தெருச்சாலைகள், வடிகால் கால்வாய்கள் ஆக்கிரமிப்புக்குள்ளானதை அறிந்தும் மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியது.

2. மண்டல அலுவலரின் அறிக்கையினை எதிர்நோக்கியிருந்த நிலையில் முறையிட்டு மனுதாரிடம் 23.03.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, பல்வேறு அமைப்புகளுக்கு 2008 முதல் தான் மனு கொடுத்ததன் அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும் ஆனால், உண்மையில் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்து விட்டதா எனத் தெரியவில்லை என்ற ஐயப்பாட்டினைத் தெரிவித்தார். மேலும், மாதவரம் மண்டலம், 33–வது வார்டு பகுதியில், செல்லியம்மன் நகர் வீட்டு மனைகளில் 90 சதவிகிதம் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் என்றும் மனுதாரர் விசாரணையின்போது உறுதி செய்தார். 2016–ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் இணைப்புச் சாலைகள் எல்லாம் துண்டிக்கப்பட்டு விட்டன என்றும் முறையிட்டு மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார்.

3. மாதவரம் மண்டல உதவிப்பொறியாளர் திரு K. வசந்தகுமார் அவர்களிடம் 24.04.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையிட்டு மனுதாரர் குடியிருக்கும் பகுதி மாதவரம் நகராட்சியில் இருந்தது என்றும், இப்பகுதி 2011–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். ஆனால், இப்பகுதி அனுமதியற்ற வீட்டுமனைப்பகுதி என்றும் உறுதிப்படுத்தினார். இம்மண்டலத்தில் 280 சாலைகள் அமைந்துள்ளன என்றும் அவற்றில் 220 சாலைகள் அமைக்கப்பட்டுவிட்டன என்றும் மீதி சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொதுப்பணித்துறை கால்வாயில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்றும், இப்பகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், அப்பணி நிறைவு பெற்றவுடன் சாலைகள் சீரமைக்கப்படும் என விசாரணையின்போது தெரிவித்தார். மழைநீர் வடிகாலுக்கான ஒரு திட்டம் தீட்டப்பட்டு உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

4. மாதவரம் மண்டல அலுவலரின் அறிக்கை, 26.05.2017 அன்று வரப்பெற்றது. அவ்வறிக்கையில், 33–வது வார்டு பகுதியில் தணிகாசலம் நகர், பொன்னியம்மன்மேடு, பிரகாஷ் நகர், அன்னபூர்ணா நகர், செல்லையா நகர் மற்றும் மகா விஷ்ணு நகர் உள்ளனவென்றும், மேற்படி நகர்களில் தணிகாசலம் நகர் மற்றும் பிரகாஷ் நகர் தவிர்த்து பிறநகர்களில் உள்ள மனைகள் அனைத்தும் அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் என மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். எனினும், இப்பகுதிகளில் அமையப்பெற்றுள்ள 280 சாலைகளில், 220 சாலைகள் தார்ச்சாலைகளாகவும், 32 தெருக்கள் கான்கிரீட் சாலைகளாகவும் பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். மேலும், மழைநீர் வடிகாலுக்கான ஒரு சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் மின்னஞ்சல் வாயிலாகவே பல துறைகளுக்கும் தன் பகுதியில் உள்ள குறைபாடுகளைத் தெரிவிக்கும் சமூகப் பணியினை ஆற்றிவருகிறார். மனுதாரர் குடியிருந்து வரும் செல்லையா நகர் உட்பட அன்னபூர்ணா நகர், மகாவிஷ்ணு நகர் மற்றும் சுமதி நகர் போன்ற நகர்ப்பகுதிகளில் மனைப்பிரிவுகள் அங்கீகரிக்கப்படவில்லையென்றும், வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்ட பிறகும் தற்போது வரை வயல்வெளி நிலங்களாகவே உள்ளதென்றும், சிலர் மட்டுமே வீடு கட்டி குடியேறி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு தற்பொழுது வெளியிட்டுள்ளது. அவ்வழிமுறைகளின்படி, இப்பகுதியில் உள்ள மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கு பொது நலனில் அக்கறை கொண்ட முறையீட்டு மனுதாரர் முயற்சி மேற்கொள்வாரேயானால், அவரது செயல்பாடு பாராட்டுக்குரியதாக அமையும். மேலும், அப்பகுதியில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொதுப்பயன்பாட்டு இடங்களை மாநகராட்சிக்குத் தானமாகப் பெற்றுத் தருவதற்கும் முறையீட்டு மனுதாரர் உரிய முயற்சியினை மேற்கொள்வார் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இந்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாதவரம் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது. மேலும், செயல்படுத்தப்படவுள்ள மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்கவும் ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு R. விஜயகுமார்,
67–C, செல்லையா நகர்,
பொன்னியம்மன் மேடு,
மாதவரம்,
சென்னை – 110.

2. மண்டல அலுவலர்,
மண்டலம் –3,
சென்னை மாநகராட்சி,
எண்.1, தட்டான் குளம் சாலை,
சென்னை – 60.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்